முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 489/2018

2024–ம் வருடம் பிப்ரவரி மாதம் 29–ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

பெயர்: ரெங்கம்மாள் (வா.சா.1) தொழில்: பேராசிரியை (ஓய்வு)

க/பெ: ராஜவேல் இனம்: பெண்

கிராமம்: பழனி டவுண் வயது: 71

மாவட்டம்: திண்டுக்கல் நாள்: 29–02–2024

முதல் விசாரணை:

சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

நான் வாதி ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது. 12.10.2018 தேதி பிரதிவாதி எனக்கு கொடுத்த இரண்டு காசோலைகள் வா.சா.ஆ.1 வரிசை (2 எண்ணிக்கை). அவற்றை 12.10.2018 தேதி வசூலுக்கு போட்டதற்கான செலான்கள் வா.சா.ஆ.2 வரிசை (2 எண்ணிக்கை). அவை வங்கியிலிருந்து திருப்பப்பட்டதற்கான 16.10.2018 தேதிய மெமோக்கள் வா.சா.ஆ.3 வரிசை (2 எண்ணிக்கை). 27.10.2018 தேதி நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கு அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.4. அதனை பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சல் உறை வா.சா.ஆ.5. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை: ஒத்திவைக்கப்படுகிறது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2024.03.01 10:36:16 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.